ஓம் சரவணஜோதியே நமோ நம

ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

05.11.2026

1. அப்பனே சுப்பனே ஆறுமுகா
அபயமென உன்னை நாடியவர்க்கு
எப்பொழுதும் காப்பாய் அருளும்
இணையிலா வேலவா சண்முகா

2. சண்முகா உன் புகழைப் பாடியே
சற்குருவாக ஆறுமுக அரங்கனும்
மண்ணுலக மக்களெல்லாம் தேறவே
மார்க்கமுடன் பராபவ துலை திங்கள்

3. திங்களிலே சூல குருவார அருளாசி
தேவர் நிலை மக்களடைய உரைப்பேன்
ஓங்காரக் குடிலை நாடி வந்து
ஓம் சரவண ஜோதியே நமோ நம என்று

4. என்றுமே நாமசெபம் போற்றி
என் பீடம் வழிபாடு செய்து
நன்று தரும் பிரணவக் குடிலின்
ஞான உணவு அருளமுது உண்டு

5. உண்டான அன்னதானமதில்
உங்களின் பங்களிப்பு சேர
தொண்டர்களாகிப் பொருளுதவி
திங்கள் தோறும் அணுகி செய்து

6. செய்துமே தருமவான் எனும்
சிறப்பான தகுதி கூட்டியே
மெய்ஞானம் தரும் என் தீட்சையை
மேலான என் சீடன் ராம்குமார் கரம்பட

7. கரம்பட ஏற்று வணங்கிட
காக்கும் தேற்றும் சக்தியாக
வரம்பல அரங்கன் யானும்
வழங்கியே துணை புரிவேன்

8. துணைபெற என் தயவிலே
தொண்டென வந்தவர் எல்லாம்

இணையிலா சக்திகள் கூடி
இடரில்லா பெருவாழ்வு கண்டு

9. கண்டுமே தேட்டு தன வளம்
கலியினில் அருள் பொருள் வளம்
உண்டாகி தன் குடி காத்து
உலகையும் காக்கும் ஞானவான்

10. ஞானவான் தருமவானாகவே
நல்நிலை கூடி சிறப்பர்
ஞானமார்க்கம் சன்மார்க்கத்தை
நானிலமெங்கும் கொண்டு செல்கின்ற

11. செல்கின்ற ஞானியாகவே சிறந்து
சீடர்கள் யாவரும் தேறிடுவர்
வல்லமைமிக்க ஞானஉலகம் படைப்பர்
வழங்கி வந்த அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி